"COVID 19 கால மாற்று உபாய கல்வி நிகழ்ச்சிதிட்டம் - 2020
COVID19 Period Alternative Strategic Education Programme -2020"

## வலயக் கல்வி அலுவலகம்
## மட்டக்களப்பு மேற்கு

22 தமிழ் மொழியும் இலக்கியமும் II | மாதிரிப் பரீட்சை - 1

தரம் - 11 | நேரம் - 2 மணித்தியாலங்கள்

வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மேற்கு

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **வழங்கப்படும் சகல அறித்தல்களையும் பின்பற்றுக.**
- **இவ் வினாப்பத்திரத்துக்குரிய மொத்தப் புள்ளிகள் 80 ஆகும்.**

01. **கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

i. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
“தண்டாமரையுடன்பிறந்தும் தண்டேன்”

ii. ‘தடி’என்ற சொல் பெயராகவும், வினையாகவும் அமையுமாறு வாக்கியம் அமைக்குக.

iii. ‘யானை மரத்தை விழுத்தியது’ இவ்வாக்கியத்தை பன்மையில் மாற்றுக.

iv. பின்வரும் பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக எழுதுக.
“மனெ நீ வெயிலுக்கவராம தங்கச்சிய பார்த்துக்க”

v. பின்வருவனவற்றுள் கட்டுரையொன்றில் இடம்பெறக் கூடாதவை.
அதிக எடுத்துக்காட்டுகள் , பொருத்தமான தலைப்பு , கூறியது கூறல் , மிகைப்படுத்தல் , அணிகள்

vi. “முத்துப்பல்” இங்கு இடம்பெற்றுள்ள அணியை குறிப்பிட்டு விளக்குக.

vii. “பச்சை வெளியில் கொக்குகள் காணப்பட்டன.” இத்தொடரிலுள்ள எழுவாய், பயனிலையை இனங்காண்க.

viii. “மாணவர்கள் பாடம் படித்தான்.” இவ்வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி திருத்தி எழுதுக.

ix. துண்டுப்பிரசுரம் ஒன்றில் காணப்படவேண்டிய அம்சங்கள் எவை?

x. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவிகளை இனங்காண்க.
(மடமட , பெரிய பெரிய , அல்லும் பகலும் , வாடிவதங்கி , கடகட)

**(20 புள்ளிகள்)**

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 250 செற்களில் அமையுமாறு எழுதுக. தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**

அ. இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். தற்காலத்தில் அதிகரித்துவரும் மதுபாவனை , அடிப்படைக் கல்வியின்மை , நெறிபிறழ்வான தொழில்நுட்ப பயன்பாடு இதனை கேள்விக்குறியாக்கியுள்ளது. இளைஞர்களின் முக்கியத்துவத்தை விபரிக்கும் விளக்கக் **கட்டுரை** வரைக.

ஆ. தொற்றா நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் உங்கள் பிரதேசத்தின் இளைஞர் மன்றக் கூட்டத்தில் நீங்கள் நிகழ்த்தும் **சொற்பொழிவு**.

இ. தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படுகின்ற சாதக, பாதகம் பற்றி இரு நண்பர்களுக் கிடையேயான உரையாடல்.

ஈ. ''தாயிற் சிறந்த கடவுளுமில்லை'' எனும் பொருள்பட தாய்மையின் உயர்வை விளக்கி சிறுகதை எழுதுக.

உ. ''நீர் சென்ற கல்விச் சுற்றுலா'' பற்றிய விபரணம்.

**(25 புள்ளிகள்)**

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

எழுத்துக்களால் சொல்லும் , சொற்களாலும் மொழி அமைகிறது. மொழி வளர்ச்சியின் அளவு கோலைக் கொண்டு சில சமயம் அம்மொழி பேசும் மக்களின் மனவளர்ச்சியும் வாழ்க்கை முன்னேற்றமும் கணிப்பிடப்படுவதும் உண்டு. ஏனெனில் மக்களின் வாழ்க்கைச் சூழல் சிந்தனைத்திறன் முயற்சி வேகம் ஆகியவற்றை அடியொற்றியே அவர்களின் முன்னேற்றம் அமையும். அம் முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் வேகமுடன் இயங்கி வருவது மொழியும் அம்மொழியின் வளர்ச்சி ஆதாரமான சொற்பெருக்கமும் ஆகும்.

வளர்ச்சிப் போக்கில் புதிய கருத்தையோ அல்லது உணர்வையோ ஏதேனும் ஒருசொல் வடிவில் மனிதன் மற்றவர்கட்கு உணர்த்த முற்படுகின்றான். இவ்வாறு கருத்து உணர்த்தும் புதியசொல் காரண அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது அடையாளம் காட்டும் இடுகுறிச் சொல்லாகவோ அமையும். மேலும் ஒரு பகுதியினர் வேறு ஒருபகுதியைச் சார்ந்த மக்களோடு உறவாடும் போது அவர்களிடமிருந்து புதிய செய்திகளை அல்லது கருத்துக்களைப் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்தகைய கருத்தையோ செய்தியையோ குறிக்கும் சொற்களும் இயல்பாகவே அவர் தம் மொழியில் இடம்பெற நேர்கிறது.

இவ்வாறே ஒவ்வொரு மொழியும் தனக்குத்தானே உருவாக்கிக் கொள்ளும் சொற்களோடு பிறமொழிச் சொற்களையும் காலப்போக்கில் ஏற்றுக் கொண்டு வளர்கின்றன. இவ்வாறு ஒருமொழியில் வந்துசேரும் சொற்கள் அந்தமொழியின் திருத்தங்களைப் பெற்று செம்மையடைகின்றன. காலப்போக்கில் இத்தகைய சொற்கள் அம் மொழியின் மூலச் சொற்கள் போன்ற தோற்றத்தையும் பெற்று விடுகின்றன.

**(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இயற்புலவர்கள் இசையை உணராமலும் இசைப் புலவர்கள் இயலை உணராமலும் இருந்ததுதான் தமிழிசை மறைவுக்குக் காரணம். இயலின்றி இசையில்லை. வாய்க்காலும் அதன்வழி ஓடுகின்ற நீரும் போல இயலும் இயல்வழி ஓடும் இசையும் இருக்கின்றன. தண்ணீர் இல்லாதபோது வாய்க்கால்

இருந்தும் பயனில்லை. வாய்க்கால் இல்லாத தண்ணீர் சரியாகப் பயன்படாமல் பாய்ந்தோடுவதும் பயனில்லை. இரண்டும் இருந்து தண்ணீர் பாயுமானால் வயல் நன்றாக விளையுமாறு போல இசையும் இயலும் கலந்து மிளிருமானால் கேட்போர் உள்ளத்தை மகிழ்விக்கும். இயல், இசையென எம் தமிழை உலகறியச் செய்த பெருமை பேராசிரியர் சுவாமி விபுலாலந்தரைச் சாரும். தனது யாழ் எனும் நூலினூடாக இத்தகு அரிய பணியினை ஆற்றியிருந்தாரவர்.

1. இப்பந்தியினூடாக ஆசிரியர் கூறவிளையும் முக்கிய கருத்து யாது?
2. கேட்போர் உள்ளத்தை மகிழ்விக்கும் இசை எத்தகையது?
3. தமிழிசை மறைவுக்கான காரணமாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
4. இப்பந்தியில் இடம்பெறும் அணியை இனங்கண்டு, பொருத்தப்பாட்டை குறிப்பிடுக.
5. இப்பந்தியில் கூறப்படும் விபுலானந்தரின் நூல் எது.

**(10 புள்ளிகள்)**

**05.** காடுகள் எம்முடைய சொத்துக்கள். தற்காலத்தில் சனத்தொகையின் அதிரிப்புக் காரணமாக வாழ்விடங்களுக்கான தேவையின் நிமித்தம் காடுகள் மீளுருவாக்க உத்திகளின்றி அழிக்கப்படுகின்றது. எனவே காடழிப்பை தடுத்து , மீள் மரநடுகையினை வலியுறுத்தும் வகையில் 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

உமது கிராமத்தில் நூலகமின்றி மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி நூலகத்தின் அவசியத்தை வலியறுத்தி உமது பிரதேசசபை தவிசாளருக்கு ஓர் கடிதம் எழுதுக. (100 சொற்கள்)

**(15 புள்ளிகள்)**